IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 103/2019 |
| | | P/W's | : | PW1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | போஸ் | CASTE | : | |
| S/O | சோத்தான் | RELIGION | : | இந்து |
| VILLAGE | கோடாங்கிபட்டி | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | 45 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.08.2025

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. வழக்கில் 2ம் இலக்கச்சொத்திற்கு எனது அப்பா பெயரில் வீட்டு வரி மற்றும் மின்சார இணைப்பு உள்ளதா என்றால் வீட்டு வரி ரசீது உள்ளது, மின்சார இணைப்பு இல்லை. மேற்படி வீட்டு வரி ரசீதுகளை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. 2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுறையில் வழக்கின் 2ம் இலக்க சொத்திற்கு அவரது மனைவி ஜோதி பெயரில் 2018ல் கிரையம் ஏற்பட்டிருப்பதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஜோதி என்பவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான்.

2. வழக்கின் 2ம் இலக்கச்சொத்து நாச்சியப்ப தேவருக்கு 04.09.1974 தேதியிட்ட கிரையப்பத்திரம்படி பாத்தியப்பட்டது என்றாலும் அதை அவர் மேற்படி ஜோதிக்கு கிரையம் கொடுத்தது சட்டப்படி செல்லும் என்றாலும் சரியல்ல. 2ம் இலக்கச்சொத்து எனது குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது இல்லை என்றாலும், அது தற்போது ஜோதிக்கு பாத்தியப்பட்டுள்ளதால் பாகப்பிரிவினைக்கு ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்குச்சொத்துக்களை தவிர எனது குடும்பத்திற்கு வேறு சொத்துக்களும் உள்ளன என்றால் சரிதான், அவற்றை பாகம் பிரிக்கப்பட்டுள்ளது.

3. எனது குடும்பத்தின் மற்ற சொத்துக்களை பொறுத்து 2002ல் பாகம் பிரித்துக்கொண்டோம். 2ம் பிரதிவாதி எதிர்வழக்குரையை பத்தி எண் 9, 10ல் குறிப்பிட்டுள்ளபடி 2002ல் எனது குடும்பத்தில் பாகப்பிரிவினை ஏற்பட்டு அதன்படி தனித்தனியே அவரவர் பாகங்களை அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். நான் எனது அப்பாவை நல்லமுறையில் பாதுகாப்பேன் என்ற எண்ணத்தில் தான் 28.08.2003 தேதியில் கூடுதலாக சொத்துக்களை எனது பெயருக்கு எனது அப்பா

தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான், அதன்படி நான் எனது அப்பாவை நல்லமுறையில் பார்த்துக்கொண்டேன்.

4. நான் எனது அப்பாவை சரியாக கவனிக்காததால் அவர் மதுரை வருவாய் கோட்டாட்சியரிடம் மனு செய்து அதன்படி எனது பெயருக்கு எழுதிவைக்கப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி ரத்து உத்தரவை எதிர்த்து முதலில் மாவட்ட ஆட்சியரிடமும், பின்பு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளையில் மனு தாக்கல் செய்தேன் என்றாலும் சரிதான். நான் எனது அப்பாவை சரியாக பராமரிக்காததாலும், 8ம் பிரதிவாதி எனது அப்பாவை நன்றாக பராமரித்ததாலும் 8ம் பிரதிவாதி மற்றும் அவரது தகப்பனரான 2ம் பிரதிவாதி மீதும் நான் வஞ்சம்கொண்டு வழக்குச்சொத்தை அபகரிக்க இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. வா.சா.ஆ.2 கிரையப்பத்திரத்தில் அதிலுள்ள சொத்து எனது தகப்பனாருக்கு பூர்வீக வழியில் பாத்தியப்பட்டு அவரது பெயருக்கு பட்டா ஏற்பட்ட சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்த பத்திரத்தில் பொய்யாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனது அப்பா பெயரில் தனிப்பட்ட ஏற்பட்டதை அது கூட்டுச்சொத்து என்றும் கூட்டுப்பட்டா வேண்டும் என்றும் ஆட்சேபணை செய்தேனா என்றால் என்னுடைய அப்பா உயிருடன் இருந்தவரை நான் ஆட்சேபணை செய்யவில்லை. எங்கள் குடும்பத்தில் 2002ல் பாகப்பிரிவினை ஏற்பட்டதன்படி வழக்கின் 1ம் இலக்கச்சொத்து எனது அப்பாவின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டு அதை அவர் 8ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

6. வழக்கின் 1ம் இலக்கச்சொத்து எனது அப்பாவின் பராமரிப்பிற்காக ஒதுக்கப்பட்டது என்றும் அவருக்குப்பின் அதை நாங்கள் பாகம் பிரித்துக்கொள்ளலாம் என்றும் முடிவு செய்திருந்ததாக வழக்குரையிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. 1ம் இலக்கச்சொத்திற்கான வா.சா.ஆ.3 பட்டா 2015ம் ஆண்டு பெறப்பட்டதாக அதில் குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல, அதற்கு முன்பிருந்தே எனது அப்பா பெயரில்தான் பட்டா இருந்தது.

7. வா.சா.ஆ.7 மின்வரி ரசீதுகள் எனது பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 மின்வரி ரசீதுகள் எனது தனிப்பட்ட வீட்டிற்கானது என்றாலும்

வழக்குச்சொத்துக்களுக்கும், அவற்றுக்கும் சம்பந்தமில்லை என்றாலும் எனக்குத்தெரியாது. எனது அப்பா 2022 ல் இறந்தார். வா.சா.ஆ.6 கிஸ்தி ரசீதுகளில் 1 மட்டும் எனது அப்பாவிற்காக நான் வரி செலுத்தியதாகவும் மற்றவை எனது அப்பா பெயரில் உள்ளன என்றால் சரிதான். மேற்படி கிஸ்தி ரசீதுகளில் உள்ள பட்டா எண்ணின் பட்டாவை பார்த்தால் அந்தச்சொத்துக்கள் யார் பெயரில் உள்ளன என்று தெரியவரும் என்றால் சரிதான். சொத்துக்கள் யார் பெயரில் உள்ளன என்று தெரிந்து விடக்கூடாது என்பதற்காக நான் பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

8. வழக்குச்சொத்துக்கும், எனக்கும் சம்பந்தமில்லை என்றாலும் எனக்கு பாகம் கேட்க உரிமையில்லை என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/- M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி